RESEARCH ARTICLE

DOI: 10.34256/ijot2124

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# குறு நாவல்களில் இறை நெறியும் வழிபாடும்

அ. நர்மதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு, இந்தியா

# The theological concepts and worships in Novella

A. Narmatha [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli-620022, Tamil Nadu, India

*Corresponding author Email: narmatharuljothi@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2124

Received: 15-04-2021; Revised: 25-05-2021; Accepted: 26-05-2021 Published: 30-05-2021

**Abstract:** We, the people, can see that inner worship helps us to know the truth of our lives and the power of our minds. If we see our soul in the way of the mind, every human being can live with respect and dignity. The law of God teaches peoples the grammar of forbearance and, where possible, the medicine of hell, grace, and, in the best possible places, insists on constantly understanding the morals possible, and the misery of the one who ignores morality. The short novel literature describes the contemporary cults of idolatry, pre-propagation and grace. What is the divine power? It answers the questions of where it is being sedated so that everyone can know.

**Keywords:** Local Rituals, Pandemic, Smallpox, Appropriation, Texts (oral and literary).

## முன்னுரை

மனிதன் ஒழுக்கத்தை வளர்க்க பக்தியை நாடினான். பக்தியானது சாந்தம், ஞானம், கருணை, பொறையுடைமை ஆகியவற்றை வளர்ப்பது. இறை நெறியானது இறைவனுடன் பிரிக்க இயலாத வாழ்வையும், பேரின்பத்தேடுதலையும் நமது உடலுக்கும், ஆன்மாவிற்கும் இடையே உள்ள உறவை அறிந்துக் கொள்ளும் வாய்ப்பையும் அளிக்கிறது. நமது சமுகம் கட்டுப்பாட்டுடனும் நன்மையுடன் விளங்கவும் இறைவழிபாடு வழிவகை செய்கிறது. உலகிற்கு உய்யும் வழியையும் சமுகம் மேன்மை அடைய வேண்டும் என்ற உள்ள உணர்வையும் கூறுகிறது. நிலைத்த மறுமைக்குரிய பேரின்பமாவது இறைபதமே என்பது பட்டினத்தார் நம்பிக்கையாகும். 'பற்று நீக்கி பற்ற வேண்டிய இறைவன்" என்பார் அவர்.

## அகவழிபாடு

மனிதன் என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்றிலிருந்தே மனத்தின் ஆற்றலை ஒரு நிலையில் குவிக்க முயன்றுள்ளான். மனத்தின் ஆற்றலை அகமுகமாக ஒருமுகப்படுத்தித் தம்முள் இறையைக் காணலாம் என்பது தான் சித்தர்களின் கோட்பாடு ஆகும். இதிலிருந்து தோன்றியமையே அக வழிபாட்டு முறையாகும். கோயிலில் உள்ள உருவங்களை தம் மனங்களிலேயே பதித்து தம் மனமே கோயில் என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். இதுவே அகவழிபாடு எனலாம்.

'நெஞ்சமே கோயில் நினையே சுகந்தம் அன்பே

மஞ்சனநீர் பூசைகொள்வாய் பராபரமே"

பராபரக்கன்னி

மேற்கண்ட பாடலின் கருத்துக்கு உறுதி சேர்கின்றான். விமலாராணியின் 'குமரிப் பெண்ணே; குயிலாலே என்னும் குறுநாவலில் வரும் ஞானஸ்கந்தன்.

"'யாதேவீஸர்வ பூதேஷீமாத்ரு ரூபேண ஸம்ஸ்த்திதா,

நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை.

நாமோ நம"

என்று சதாசர்வ நேரமும் உள்ளத்தையே கோவிலாக பாவித்து சுலோகம் சொல்லிய படியே, தான் செய்யும் செயல்களையே தெய்வமாக எண்ணுகிறான். உள்ளமே கோயிலானதால் தான் வேதவித்து ஞானா, எல்லோரிடத்திலும், கடவுள் இருக்கிறார், ஆண்டவன் சந்நிதானத்திலே உயர்வு தாழ்வென்பது கிடையாது என்று கீழ்குலத்தைச் சார்ந்த செல்லிக்கு அறிவுரை வழங்கினான். எவரும் எவருக்கும் எஜமானனுமல்ல. அடிமையுமல்ல ஆண்டவன் ஒருவரே இவ்வுலகத்தின் எஜமான் என்கிறான்.

இக்கருத்துக்கு உறுதி சேர்க்க சிவவாக்கியர்,

'கோயிலஎவ தேதடா குளங்களாவ தேதடா

கோயிலுங் குளங்களுள் கும்பிடுங் குலமாரே

கோயிலு மனத்துளே குளங்களு மனத்துளே

ஆவதுமழிவது மில்லையில்லை யில்லையே" (சிவவாக்கியம்: 153) எனக்குறிப்பிடுகிறார். ஜெயகாந்தனின் பிரம்மோபதேசம் குறுநாவலில் வரும் பிராமணர் சர்மா இறைவனிடத்தில் அன்பும் மனதில் தூய்மையும் ஒவ்வொரு நொடியும் இறைவனின் நாமத்தை துதிபாடுகின்ற வேத நம்பிக்கையுள்ள சதானந்தனை தந்தை ஸ்தானத்திலே அமர்ந்து, காய்த்திரி மந்திரம் கற்பித்து பிரம்மோபதேசம் செய்வித்தார். குலத்தால் அல்லாது தூய உள்ளத்தால் கடவுளை பூஜிக்கும் பிராமணராகிறான் சதானந்தன்.

## பொறையுடைமையும் கருணையும்

'அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு

இவ்வுலகம் இல்லாகி ஆங்கு"

என்ற வள்ளுவரின் வைரவரிகளுக்கு உருவம் தந்துள்ளார் 'மீதி இருள்" ஆசிரியர் அருமைநாயகம். மீதி இருளில் வரும் 'வேதமணி" மனித நேயத்தின் வார்ப்பு. ஆபிரகாம் வீட்டில் வேலைபார்க்கும் வேதமணியை குழந்தை என்று எண்ணாது கொடுமை செய்கிறார் ஆபிரகாமின் மனைவி சாராள். கடவுளின் பிள்ளையாக ஊதியம் செய்யும் ஆபிரகாம் இதை கண்டும் காணாமலிருக்கிறார். தன் படிப்புக்கு ஆபிரகாம் உதவாத போதும் அவரின் வளர்ப்பு மகளுக்கு கல்வி கற்பிக்கின்றான் வேதமணி. நாய்களும், பாம்புகளும் ஓடி ஆடும் இடங்களைக் கடந்தும் நள்ளிரவில் ஆபிரகாமின் சலவைத் துணிகளை வாங்கி வருகிறான். அயலாரின் உதவியோடு படித்துப் பட்டம் பெற்று, நல்ல உபயோகத்தில் இருக்கும் வேதமணியைப் பழிதீர்க்க எண்ணுகிறார் ஆபிரகாம். இறந்த ஒருவனை வேதமணி கொன்றான் என்று வழக்குத் தொடுக்கிறார் ஆபிரகாம். எல்லாம் செய்தது ஆபிரகாமும் அவரின் கை கூலியும் என்பதை அறிந்த வேதமணி தன் பரமபிதாவைத் தனக்குள்ளே நினைத்து, என்னை என் சகல துன்பங்களோடு உமது திருச்சிந்தத்திற்கு ஒப்புக் கொடுக்கிறேன் என ஜெபித்து ஜெபித்துக்கண்ணீர் சிந்துகிறான்.

"நீதி தோஷம் நிரபாரத்தை நெருக்கி ஒடுக்கும் போது நியாயம் நிர்கதியாகுமோ? எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்சம் இலை உதிருமா? கடவுளின் பிள்ளை கஷ்டத்தில் இருக்கும் போது அமைதியாக இருப்பாரா? கடவுளின் திரவிளையாடலால் வேதமணி ஒன்றும் செய்யாத நிரபராதி என்று நிரூபிக்கப்படுகிறது"இந்நிலையிலும் தனக்கு துரோகம் இழைத்த ஆபிரகாம் மீது கருணை பிறக்கிறதுவேதமணிக்கு. தன்னைக் கயவன் என்று கூறும் போது தானடைந்த வேதனை இவர்களுக்கும் அடைய நேருமே? ஏன்று நீதிபதியிடம் அவர்களை விடுவிக்குமாறு வேண்டுகிறான்.

எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் அனைவரையும் வாழ வைப்பர். தன் நண்பன். தன் சுற்றம் என்ற நிலையோடு அல்லாது, அவற்றையும் கடந்து நமக்கு எந்தவித தொடர்பும் அல்லாத பிறமாந்தர்களிடம் காட்டுகின்ற கருணையானது உயர்ந்தது. இதுவே சிறந்த பொறையுடைமையாகும். ஓர் அறிவு முதல் ஐந்தறிவு படைத்த பிற உயிர்களுக்கு உள்ளன்போடு தொண்டுகள் செய்யும் உயரிய நோக்கம் கொண்டவர்கள் நம் முன்னோர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'வாடிய பயிர்களைக் கண்டபோதெல்லாம்

வாடினேன்.

பசியால் இளைத்தே

வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த

வெற்றரைக்

கண்டுள்ளம் பதைத்தேன்"

என்கிறார் வள்ளலார். தீமை செய்தோருக்கும் கருணை புரியும் வேதமணியை தெய்வத்தை தன்னோடு கொண்டு திரிகிறவனாகப் படைத்துள்ளார். அருமை நாயகம்.

மாணிக்கப் புதையல் குறுநாவலில் வரும் பவானி கருணைக் கடலில் கரைகண்டவள். தன் அக்கா நாகாவிற்கு குழந்தை இல்லை என்ற ஏக்கத்தினால் உருக்குலைந்திருப்பவளை, தன் மழலை என்ற ஜுவநதியால் கரைசேர்த்தாள். ஒரு பெண்மையை பெருமைப்படுத்தும் தாய்மையே தன் அக்காவின் உயிரென எண்ணி, தன் முதல் மகவை நாகாவிற்குத் தருகிறாள். இவள் போன்ற பெண்களின் கருணையினால் தான் உறவின் உன்னதம் உலகில் வேரூன்றி நிற்கின்றது.

## அறம் வலியுறுத்தல்

அறமானது விலங்கினை மனிதனாக்கும் மாண்புடையது. ஜெயகாந்தனின் ரிஷிமூலம் என்ற குறுநாவலில் வரும் ராஜாராமனுக்கு பருவ வயதில் வரும் பாலியல் எண்ணங்கள் அவன நினைவுப் பாதையில் சுழன்று கொணடே இருக்கிறது. அதை அகற்றும் கருவியாக இறை நம்பிக்கையைப் படைத்துள்ளார் ஆசிரியர். எட்டெழுத்து மந்திரமான திருமந்திரம், குலந்தரும், செல்வம் தரும், பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலம் தரும் சொல் என்று திருமங்கையாழ்வார் எடுத்துக் கொடுத்ததை ராஜாராமன் நன்கு உணர்ந்தவன் போலும், அதிக ஞானமும் வைதீக ஆசாரங்களோடும் விளங்கும் ராஜாராமன் காமத்தீயை அணைக்க இறைவனின் பாதங்களை சரணாகதியாய் பற்றுகிறான்.

'அறத்தைக் காப்பாற்றுபவனை அறம்

காப்பாற்றுகிறது"

மனுநீதி -பா.எ.8

மேற்கண்ட பாடலின் படிமமாக காட்சியளிக்கின்றான் ராஜாராமன்.

நீலபத்மநாபனின் யாத்திரை குறுநாவல் நாயகன் சிவப்பிரகாசம். காம எண்ணங்கள் அவனை ஆட்கொள்ள கூடாவொழுக்கத்தில் ஈடுபடுகின்றான். அதன் பயனாக விளைந்தது பால்வினை நோய்.

'அறத்தை அழிப்பவனை அறமே

அழிக்கிறது" (7)

மனுநீதி -பா.எ.18

நோயின் வீரியம் சிவப்பிரகாசை இறைவனிடம் அழைத்துக் கொண்டது. இப்பாடலின் பொருள் சிவப்பிரகாஷ் வாழ்வின் பாடுபொருள்களாயின.

## குறுநாவலில் காணலாகும் வழிபாட்டு முறைகள்

### உருவவழிபாடு

ஆதிமனிதன் தான் கண்டு அஞ்சிய இடி, மின்னல், மழை, முதலியவற்றைத் தொழுதான். பின்னர் தான் உய்வதற்கு காரணிகளாய் அமைந்த இயற்கையை வணங்கினான். சிங்கம், பாம்பு இன்ன பிற ஆபத்தை ஏற்படுத்தும் கொடிய தன்மைகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இறைவனின் திருவடிகளில் தஞ்சமடைந்தான். இதிலிருந்து தான் இறைவணக்கம் வளர்ச்சி பெறத் துவங்கியது.

'மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய வைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனலுலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல். பொருள் :77)

என்ற அடிகளில் நிலம் சார் வாழ் மக்களின் வழிபாட்டு உருவமாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்ற உருவம் பண்பாட்டு அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகிறது. அச்சத்தில் தொடங்கிய வழிபாடானது உருவ வழிபாடாக பரிணாமம் பெற்றது. பின்னர் எழுந்த சமணம், பௌத்தம் மற்றும் வைணவ சமயங்களின் தோற்றத்தால் தமக்கும் விஞ்சிய சக்திகள் உள்ளன என்று உணர்ந்த மக்கள், அவரவர்களின் குலங்களுக்கு ஏற்ப தெய்வதங்களுக்கு பெயர்கள் இட்டு வழிபடலாயினர். தெய்வங்களை குல தெய்வம், எல்லை தெய்வம், காவல் தெய்வம், கலியுக தெய்வம் என்ற வகைப்பாடுகளில் அறிய முடிகிறது. இரா. சைலஜா சக்தி எழுதிய 'பொம்மிபுரம்" என்ற குறுநாவலில் எல்லை தெய்வமான சுடலை மாடசாமியின் வழிபாட்டு முறைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கைலாயத்தில் உள்ள எரிகின்ற மணி விளக்கின் சுடலிருந்து தோன்றியவரே சுடலைமாடன். சுடலைமாடசாமியின் சக்திகள் பற்றிப் பல கதைகள் உள்ளன.

### முன்னிலைப் பரவல்

பக்தி இலக்கியத்தில் முன்னிலைப் பரவல், அருள் வேண்டல் என்னும் கோட்பாடுகள் காணப்படுகின்றன. முன்னிலைப் பரவல் என்பது இறைவனைத் தமக்கு முன்னே நிறுத்தி வேண்டும் பொருள்களை இட்டுப்படையல் முதலியவற்றைச் செய்து வணங்குதல் ஆகும். சுடலைமாடசாமிக்கு படையல் இடுவதற்கென்றே கணியான் வகுப்பைச்சார்ந்த மக்கள் இருக்கின்றனர். சுடலை மாடசாமியின் விருப்பத்திற்காக சிவன் கணியான் வம்சத்தினரை உருவாக்கி ஆட வைத்தார் என்று சொல்லப்படுகிறது. இந்திராணி நடனமாடும் பொழுது அவள் காற்சிலம்பின் பரல் தெரித்து விழ அதிலிருந்து பிறந்ததே கணியான்கள். நாட்டுப்புறக் கலைகளில் கணியான் ஆட்டத்திற்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. இக்குறுநாவலில் வரும் கணியான் வகுப்பைச் சேர்ந்த நல்லகண்ணு என்பவர் நள்ளிரவு பனிரெண்டு மணிக்கு சாமியாடியுடன் ஒரு சிலரை மட்டும் அழைத்துக் கொண்டு தீப்பந்த வெளிச்சத்துடன் சுடுகாட்டுக்குச் சென்று சுடலைமாடனுக்கு படையல் இடுகிறார். அங்கே மண்ணைக் குழைத்து மாடன்சாமியை உருவாக்குகிறார். அவருக்கு எதிரே வாழை இலையில் மஞ்சள், தேங்காய், பழத்துடன் பச்சரிசு சோறு படைக்கப்படுகின்றன. மகுடத்தின் ஓசை நிசப்த்த இருளைக்கிழிக்கிறது. மகுடம் அடித்து முடித்ததும் நல்லகண்ணு தேங்காய் மீதிருந்த மஞ்சள் கயிற்றை எடுத்து கையின் மேல் இருகக்கட்டுகிறார். பின் கையை கீறி மூன்று சொட்டு இரத்தத்தை பச்சரிசி சோறிலும், 21 வாழை இலைகளில் ஒரு சொட்டு இரத்தத்தையும் விடுகிறார். அதனுடன் குங்குமம் கலக்கப்பட்டு சோறு உருண்டையாக உருட்டப்பட்டு மேற்குத்திசை ஒழிய மற்ற மூன்று திசைகளிலும் வானை நோக்கி வீசப்படுகிறது. மகுடப்பறை முழங்கப்படுகிறது.

## சுடலைமாடனின் மனமும் குளிர்கிறது

விமலாராணியின் 'குமரிப்பெண்ணே குயிலாலே" எனும் குறுநாவலில் வரும் நடேச சாஸ்திரிகள் தனக்கு உண்ண உணவு இல்லை என்ற நிலையிலும் அவர் வசிக்கும் ஊரில் உள்ள கோயில் பிள்ளையாருக்கு பூஜைகளை பக்தி சிரத்தையுடன் கவனித்துக் கொள்கிறார். நடேச சாஸ்திரிகளே நாலு வீட்டில் போய் பிள்ளையாருக்கு என்று அரிசி, பூஜைக்கு வேண்டிய திரவியங்கள், பூக்கள் இத்தியாதி சாதனங்கள் ஆகியவற்றை வாங்கி வருகிறார். சிலர் வீட்டில் பூத்த பூக்களை அளிப்பார். சிலர் பணம் கொடுப்பர். சிலர்வீட்டில் அரிசி தருவார்கள். பிள்ளையாரும் பட்டினி போடாமல் நடேச சாஸ்திரிகளும் பட்டினி இல்லாமல் பிள்ளையாருக்கு நைவேத்தியம் செய்து வழிபடுகிறார்.

## அருள் வேண்டல்

அருள்வேண்டல் என்பது தம் குறைகளைக் கூறி அவை நீங்க இறைவனின் அருளை வேண்டி நிற்றலாகும். தனி மனித நலம், சமுதாய நலம், நாட்டு நலம், அருவிகளில் நீர் பெருக வேண்டல், நிலம் நன்கு விளைதல், மழை பொழிதல் ஆகியன பற்றி மக்கள் இறைவனை வேண்டி நிற்பர். 'பொம்மி புரம்" குறுநாவலில் வரும் நல்லக்கண்ணுவின் புதல்வர்கள் இருவரும் பெண்வேடமிட்டு மகுடப் பாறை முழங்க கணியான்கள் ஆட்டம் ஆடி மக்களின் குறைகளைக் கூறி மக்கள் அனைவரும் இன்பமுற்று வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டினர்.

'குமரிப்பெண்ணே குயிலாலே குறுநாவல்' நாயகன் ஞானா நடேச சாஸ்திரிகள் அளித்த பூமாலையை சார்த்தி தினுசு தினுசாகப் பூக்களில் அலங்காரம் பண்ணுவான். நிறைய வரும்படி கிடைத்தால் சந்தனக் காப்பு, வெண்ணெய்க் காப்பு, அன்னாபிஷேகம், முப்பழ அபிஷேகம் என்று ஜமாய்த்துத் தள்ளி விடுவான். அதிர்ஷ்டக்காரப் பிள்ளையார், உற்சவ விக்ரம் இல்லாத சின்ன கோயில் என்பதால் விக்ரகம் செய்ய முடிவு செய்து நிதி திரட்டுகின்றனர். ஊர்மக்கள் நலன்களுக்காக விழாவும் எடுக்கின்றனர்.

## இறையாற்றல்

இறைவனை போற்றுதலும், வழிபடுதலும், புகழ்பாடுவதுமான கருத்துக்கள் நம் பண்டைய இலக்கியங்களில் காணப்படுகின்றன. இறையாற்றலானது உலக வாழ்வைச் செம்மைபடுத்துகின்றன. இவை சமூகத்தில் தீமைகளை அழித்து மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. 'பொம்மிபுரம்' குறுநாவலில் வரும் பிரசிடெண்ட் ஏகாம்பரம் தன் ஊர் மணலையே கொள்ளையடித்து ஆடரம்பரமாக வாழ்கிறான். இதனை அறிந்த கணியான் ஆட்டத் தலைவன் நல்லக்கண்ணு நீதி கேட்கிறான். நீதி கேட்க சென்றவனை கொலை பாதகம் செய்து விடுவேன் என்று கூறுவதோடல்லாமல் அவன் தெய்வீகத் தொழிலையும், தெய்வத்தையும் அவதூறாகப் பேசுகிறான். தாங்கவொண்ணா துயர் அடைந்த நல்லகண்ணு சுடலைமாடசாமியிடம் சென்று அய்யா நாடளும் சாமி நடக்குறத வேடிக்க பாக்குறதுதான் உங்க வேலையா? சொன்னவன் கழுத்துல உங்க வீச்சருவா பாயதா? எல்ல தாண்டுனவன் கால வெட்டியெறிய மாட்டியளா? உம்ம வீரக்கதை பாடிப் பொழக்கிற நாங்க அம்புட்டு கேவலமா போயிட்டோமாய்யா? என்று வாய்திறந்து கதறுகிறார்.

'பூசையது செய்வம் என்று கூட்டம் கூடி
புத்திகெட்டு கைம்முறையின் போக்கை விட்டு
பாசையது மிகப் பேசி பாட்டும் பாடிப்
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக் காணார்
ஆசையிலே பெண்ணாசை மயக்கத் தாலே
அங்கிருந்த வாமத்தைப் பங்கு போட்டுப்
பேசையிலே மனம் வேறாய் நினைப்பான் பாவி
புரட்டு உருட்டாய் நினைதப்பிப் பேசுவானேன்"

(கருவூரரின் பூசை விதிப்பாடல் மேற்கண்ட அடிகளில், இறையை மேற்கொள்ளும் விதிமுறைகளையும் விதி மீறுபவர்கள் கெட்டொழிதலையும் அழகுற எடுத்துரைத்துள்ளார். மண்ணை கடத்திச் சென்ற ஏகாம்பரத்திற்கு இயற்கையின் சீற்றத்தினால் தண்டனை வழங்கினார் சுடலைமாடன். ஏகாம்பரத்தின் அதிகார பலமும், பணபலமும் அவரது உயிரை பிடித்து நிறுத்த இயலாமல் பதுங்கிக் கொண்டு விட்டன. மண்ணை விற்றுப் பிழைத்த மனிதன் மண்ணிற்குள் புதைந்த நிலையிலே மூச்சை விட்டான்.

"குருதி கொடுத்து மாடனுக்கு

உறுதியாக உதவும் கணியான்

பரிதி இருக்கும் காலம் வரை

இறுதியின்றி வாழ்வானே "(10)

என்னும் வரிகள் நல்லக்கண்ணுவின் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டன.

## முடிவுரை

கருணை கடலினும் பெரிது என்பர். வறுமையில் கட்டுண்டவன் எவ்வாறு இன்பமாக வாழமுடியாதோ, அதே போல் கருணையும் மனிதநேயமும் அற்றவன் மறுமையில் நல்வாழ்வு அடைய முடியாது. பசுமாடுகளில் கருப்பு, சிவப்பு, வெள்ளை என்ற வேறுபாடு இருப்பது போல மக்கள் எவ்வேராயினும் அவர்களின் ஆன்ம நிலையில் எந்த வேறுபாடும் இருக்கக் கூடாது. இறை வழிபாடு மக்களின் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகத்திகழ்கின்றது. மனிதன் வாழ்வதற்குரிய வாழ்வியல் நெறிகளை மேற்கண்ட கருத்துக்கள் அறிவுறுத்துகின்றன. அகம் பிரம்மாஷ்மி. அவைகூறும் வழி நடந்தால் மனித வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

## References

Jayakanthan, D., (1979) Brahmopadesam, Meenakshi Puthaga Nilayam, Madurai, India.

Jayakanthan, D., (2008) Rishimoolam, Indian Writing, India.

Maanikkap Pudhaiyal, (2017) Vimala Ramani, Pustaka Digital Media, Bengaluru, India.

Vadivelu Mudaliyar Ma., (2017) Gunangudi Mastan Sahib Padalgal Paatum Uraium, Paarinilayam, Chennai, India.

Vallalar, (2000) Thiruvarutpa urainadai, Varthamaan pathipagam, Chennai, India.

## Acknowledgement

Nil

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

## About the License

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

A. Narmatha, The theological concepts and worships in Novella, Indian Journal of Tamil, 2(2) (2021) 23-29. https://doi.org/10.34256/ijot2124